

போலியோ இல்லா உலகத்தை உருவாக்கும் உயரிய நோக்குடன் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தொகுதிக்குட்பட்ட மல்லாங்கிணறு பகுதியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று பச்சிளம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகளை வழங்கினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டுசெஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை மாவட்டப் பொறுப்பாளர் – முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கிவைத்தார். உடன் ஒன்றியப் பெருந்தலைவர் விஜயக்குமார்,பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் உள்ளனர்.

# கர்நாடகப் பின்னணியைக் கொண்டவரை டெல்லி பிரதிநிதியாக நியமிப்பதா?

## பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. கண்டனம்!



சென்னை, ஜுன் 29-

கர்நாடக பின்னணியை கொண்ட ஒருவரை தமிழ்நாட்டின் டெல்லி பிரதிநிதியாக நியமித்திருப்பது, “வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது” போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது என தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதியாக வெங்கடநாராயணா நியமிக்கப்பட்டி ருப்பதை கடுமையாக கண்டிக்கிறோம். ஏற்கனவே கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமார் மற்றும் அங்குள்ள நீர்வளத்துறை அமைச்சர், “எங்கள் மாநில எல்லைக்குள் மேகதாது அணையை கட்டுவதை யாராலும் தடுக்க முடியாது” என்ற நிலைப்பாட்டை தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

பல ஆண்டுகளாக தமிழ்நாடு கர்நாடக மாநிலங்களுக்கு இடையே காவிரி நீர் பிரச்சினை நீடித்து வரும் நிலையில், மேகதாது அணை தொடர்பாகவும் தமிழ்நாட்டின் உரிமையை பாதுகாக்கும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. உச்சநீதிமன்றமும், காவேரி மேலாண்மை தொடர்பான அமைப்புகளும் இந்த விவகாரத்தில் சட்ட மற்றும் நிர்வாக வழிகாட்டுதல்களை வழங்கியுள்ள நிலையிலும், கர்நாடக அரசு, அணை கட்டும் முயற்சியில் உறுதியாக இருப்பதாக தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகிறது. இத்தகைய சூழலில், கர்நாடக பின்னணியை கொண்ட ஒருவரை தமிழ்நாட்டின் டெல்லி பிரதிநிதியாக நியமித்திருப்பது பொதுமக்களிடையே பல்வேறு கேள்வி களை எழுப்புகிறது.

இது, “வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது” போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியான நபர்கள் பலர் இருக்கையில், ஏன் இந்த நியமனம் என்பதற்கு தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும். எனவே, தமிழக அரசு இந்த நியமனத்தை மறுபரிசீலனை செய்து, வெங்கடநாராயணா நியமனத்தை திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட் டுள்ளார்.

### போதை பழக்கம் – த.வெ.க அமைச்சரை கண்டித்து

# சென்னை மாவட்ட மாணவர் அணி சார்பில் ஆர்ப்பட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிக்கை!



சென்னை,ஜுன்.29-

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், இளந்தலைவர்- கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதல் படியும் கழக மாணவரணி சார்பில் தமிழக வெற்றிக் கழக அமைச்சர் சரத்குமார் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து ஒருங்கிணைந்த சென்னை. மாவட்ட மாணவர் அணி சார்பில் சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டு மைதானம் அருகில் இன்று (29.6.26 திங்கட்கிழமை) காலை 9.30 மணி அளவில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்ததில் கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்..பி, கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் நா.. எழிலன், கழக மாணவரணி செயலாளர் ஈரோடு வீரமணி ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட இளைஞரணி, மாணவரணி, இளைஞரணி தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு ஆர்ப்பரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### அமோனியா வாயு கசிந்த விபத்தில்

# சிகிச்சை பெற்றுவந்த மேலும் ஒருவர் உயிரிழப்பு!

## பலி எண்ணிக்கை 16 ஆக உயர்வு!

திருவள்ளூர், ஜுன் 29-

திருவள்ளூர் கன்னிகைப்பேர் கிராமத்தில் இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் கடந்த 21ம் தேதி அமோனியா வாயு கசிவு ஏற்பட்டத்தில் 80க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு சென்னை ராஜிவ்காந்தி மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் நேற்று வரை 15 பெண்கள் உயிரிழந்த நிலையில் ஸ்டான்லி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த கபிதா ஜுங்கா(22) என்ற பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதன் காரணமாக அமோனியா வாயு கசிவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 16ஆக உயர்ந்தது.

உயிரிழந்தவர்களில் 14 சடலங்கள் அவர்களின் சொந்த மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 2 சடலங்களை அனுப்பும் பணிகள் நடைபெற்று வருகிறதாகவும் தமிழ்நாடு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

அமோனியா வாயு கசிவால் பலியானோர் எண்ணிக்கை, 16ஆக உயர்ந்துள்ள நிலையில் “இறால் பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு ஒரு வாரத்தில் ‘சீல்’ வைக்கப்படும்,” என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கவிதா தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவைச் சேர்ந்தவரை

# டெல்லி பிரதிநிதியாக நியமிப்பது தமிழ்நாட்டுக்கு பயன் அளிக்காது!

## கம்பம் செல்வேந்திரன் கண்டனம்!



கம்பம், ஜுன் 29-

கர்நாடகாவைச் சேர்ந்தவரை டெல்லி பிரதிநிதியாக நியமிப்பது தமிழ்நாட்டுக்கு பயன் அளிக்காது என கம்பம் செல்வேந்திரன் தெரிவித்தார்.

தேனி மாவட்டம், கம்பத்தில் தமிழ்நாடு அரசின் முன்னாள் டெல்லி சிறப்புப் பிரதிநிதி கம்பம் செல்வந்திரன் அளித்த பேட்டி வருமாறு:

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக கர்நாடகாவைச் சேர்ந்த வெங்கடநாராயணாவை, முதல்வர் விஜய் நியமித்த செய்தி அதிர்ச்சி அளித்தது. தமிழ்நாடு அரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து, தேவைகளைப் பெற்று மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டிய பெரிய பொறுப்பு டெல்லி பிரதிநிதிக்கு உள்ளது.

அப்படிப்பட்ட பதவியில் தமிழகத்தை சேர்ந்தவரை நியமிக்காமல், கர்நாடகாவை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த நியமனம் தமிழ்நாட்டுக்குப் பயனளிக்காது. ஏனென்றால், தமிழன் என்ற உணர்வு இருக்கிறவர்களால்தான் தமிழ்நாட்டுக்குப் பயனளிக்கும் திட்டங்களுக்காகப் போராட முடியும், வாதாட முடியும். கலைஞர் முதல்வராக இருந்த 2006-2011 வரை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி யாக நான் இருந்தேன்.

எம்பியாக 5 ஆண்டு இருந்த காரணத்தால், டெல்லியில் உள்ள அமைச்சர்களோடும், அதிகாரிகளோடும் எனக்கு அறிமுகம் இருந்தது. அவர்களை எப்படி அணுகுவது என்பதும் தெரிந்திருந்தது. அதனால் பணியாற்றுவது எளிதாக இருந்தது. எதுவுமே தெரியாத ஒருவரைத் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி என்று நியமித்தால், அவரால் திக்குத் தெரியாத காட்டைப் போல அலைந்து திரிய முடியுமே தவிர, முறையாக அணுக முடியாது.

ஒருவேளை விஜய்க்கு டெல்லியில் ஏதாவது படப்பிடிப்பு இருக்கிறதோ தெரியவில்லை. தனக்கு ஒரு படம் தயாரித்த தயாரிப்பாளருக்கு, சம்பளத்தைக் குறைத்து வாங்கி உதவலாம் அல்லது வேறு ஏதாவது முதல்வர் என்ற முறையில் செய்து கொடுக்கலாம். அப்படி அன்பை காட்டலாமே தவிர, உயர் பதவிகளில் நியமிப்பது நல்ல முன்னுதாரணமாக இருக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு

# செஞ்சியில் இலவச கண் சிகிச்சை முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்

செஞ்சி, ஜுன் 29-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார்.ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை தொடங்கி வைத்தார்.

முகாமில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை,நிர்வாகிகள் தொண்டரணி பாஷா, பிரபு கோகுல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி உனக்குள்ள விநாயகர் மருத்துவமனை கண் மருத்துவர்சிவா தலைமையிலான மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு கண்ணில் புரைநீக்குதல், கிட்ட பார்வை தூர பார்வை கண்ணில் நீர் அழுத்தம், மற்றும் கண்சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் 250மேற்பட்ட நோயாளிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை தென்மேற்கு மாவட்டம் – 133 வது வட்ட – மாவட்டப் பிரதிநிதி - கழக முன்னோடி

# பழக்கடை இரா.மூர்த்தியின் தாயார் இரா. சோலை அம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!



சென்னை,ஜுன்.29-

தியாகராயர்நகர் - பனகல் பூங்கா பழக்கடை இராமசாமி அவர்களின் மனைவியும், 126-வது வட்ட முன்னாள் செயலாளரும், சென்னை தென்மேற்கு மாவட்டம், 133வது வட்டம், மாவட்டப் பிரதிநிதி பழக்கடை இரா.மூர்த்தியின் தாயாருமான திருமதி. இரா.சோலை அம்மாள் (வயது 91) நேற்று (28.06.2026), ஞாயிறு மாலை 4 மணியளவில் இயற்கை எய்தினார் என்தை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்ததும், கழக நிர்வாகிகள் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். அவரது இறுதி ஊர்வலம் இன்று 29.6.2026 மாலை 5 மணியளவில் தியாகராயர் நகர் ராஜீ பிள்ளைத் தோட்டம் ஆனந்தன் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு, கண்ணம்மாப் பேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் நடைபெறுகிறது.

### போதைப் பழக்கம்: த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து

# கழக மாணவர் அணி சார்பில் இன்று ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிக்கை!

ஈரோடு, ஜுன் 29 -

இதுகுறித்து கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி. ஈரோடு வீரமணி அறிக்கை வருமாறு: -

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் கவனத்திற்கு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும் இளந்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கழக மாணவர் அணியின் சார்பில், தமிழக வெற்றிக் கழக அமைச்சர் சரத்குமார் அவர்கள் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து மாவட்டத்தின் பிரதான இடத்தில் இன்று (29.06.2026 - திங்கட்கிழமை) காலை 09.30 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி பெருந்திரளாக நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாணவர் அணிச் செயலாளர் திருமதி. ஈரோடு வீரமணி அறிவித்துள்ளார்.




தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார் தலைமையில் நடைபெற்றது.உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.கலை கதிரவன் (தென்காசி)ஈ.ராஜா (வாசுதேவநல்லூர்) திலீபன் ஜெயசங்கர் (சங்கரன்கோவில்) மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் நகராட்சி வளாகத்தில் தேசிய போலியோ ஒழிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமை திருவள்ளூர் நகர்மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன் தொடங்கி வைத்து, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நகர்மன்றத் தலைவர் பொன் பாண்டியன், நகர்மன்ற உறுப்பினர் ஜி.ஆர். ராஜ்குமார் தாமஸ், நகராட்சி சுகாதார அலுவலர் மோகன், வருவாய் ஆய்வாளர் ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.